# மார்ச் - 25 - சனி

## கிறிஸ்து பிறப்பு அறிவிப்பு

**எனவே, இதோ வருகின்றேன்:" என்னைக் குறித்துத் திருநூல் சுருளில் எழுதப்பட்டுள்ளது: திபா. 40:7**

---

## முதல் வாசகம் : ஏசாயா 7 : 10 – 14 8 : 10

ஆண்டவர் ஆகாசுக்கு மீண்டும் தம் திருவாக்கை அருளிச் சொல்லியது: "உம் கடவுளாகிய ஆண்டவர் உமக்கு ஓர் அடையாளத்தை அருளுமாறு கேளும் அது கீழே பாதாளத்திலோ, மேலே வானத்திலோ தோன்றுமாறு கேட்டுக்கொள்ளும்" என்றார். அதற்கு ஆகாசு, "நான் கேட்கமாட்.டேன். ஆண்டவரைச் சோதிக்க மாட்டேன்" என்றார். அதற்கு எசாயா "தாவீதின் குடும்பத்தாரே! நான் சொல்வதைக் கேளுங்கள் மனிதரின் பொறுமையைச் சோதித்து மனம் சலிப்படையச் செய்தது போதாதோ? என் கடவுளின் பொறுமையைக்கூட சோதிக்கப் பார்க்கிறீர்களோ? ஆதலால் ஆண்டவர்தாமே உங்களுக்கு ஓர் அடையாளத்தை அருள்வார். இதோ, கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார் அக்குழந்தைக்கு அவள் "இம்மானுவேல்" என்று பெயரிடுவார். ஒன்று கூடிச் சதித்திட்டம் தீட்டுங்கள் அதுவும் விழலுக்கு இறைத்த நீராகும் கூடிப்பேசி முடிவெடுங்கள் அதுவும் பயனற்றுப் போகும். ஏனெனில் கடவுள் எங்களோடு இருக்கிறார்.

**பதில்பாடல் :** இறைவா இதோ உம் திருவுளம் நிறைவேற்ற நான் வருகின்றேன்.

## இரண்டாம் வாசகம் : ஏபிரேயர் 10 : 4 - 10

சகோதர சகோதரிகளே!, காளைகள், வெள்ளாட்டுக் கடாக்கள் இவற்றின் இரத்தம் பாவங்களைப் போக்க முடியாது. அதனால்தான் கிறிஸ்து உலகிற்கு வந்தபோது, "பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை, ஆனால் ஓர் உடலை எனக்கு அமைத்துத் தந்தீர். எரிபலிகளும் பாவம் போக்கும் பலிகளும் உமக்கு உகந்தவையல்ல. எனவே நான் கூறியது என் கடவுளே, உமது திருவுளத்தை நிறைவேற்ற, இதோ வருகின்றேன். என்னைக் குறித்துத் திருநூல் சுருளில் எழுதப்பட்டுள்ளது" என்கிறார். திருச்சட்டப்படி செலுத்தப்பட்ட போதிலும் "நீர் பலிகளையும் காணிக்கையையும் எரிபலிகளையும் பாவம்போக்கும் பலிகளையும் விரும்பவில்லை இவை உமக்கு உகந்தவையல்ல" என்று அவர் முதலில் கூறுகிறார். பின்னர் "உமது திருவுளத்தை நிறைவேற்ற, இதோ வருகின்றேன்" என்கிறார். பின்னையதை நிலைக்கச் செய்ய முன்னையதை நீக்கிவிடுகிறார். இந்தத் திருவுளத்தால்தான் இயேசு கிறிஸ்து ஒரே ஒரு முறை தம் உடலைப் பலியாகச் செலுத்தியதின் மூலம் நாம் தூயவராக்கப்பட்டிருக்கிறோம்.

## நற்செய்தி : லூக்கா 1 : 26 - 38

ஆறாம் மாதத்தில் கபிரியேல் என்னும் வானதூதரைக் கடவுள் கலிலேயாவிலுள்ள நாசரேத்து என்னும் ஊரிலிருந்த ஒரு கன்னியிடம் அனுப்பினார். அவர் தாவீது குடும்பத்தினராகிய யோசேப்பு என்னும் பெயருடைய ஒருவருக்கு மண ஒப்பந்தமானவர். அவர் பெயர் மரியா. வானதூதர் மரியாவுக்குத் தோன்றி, "அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்" என்றார். இவ்வார்த்தைகளைக் கேட்டு அவர் கலங்கி, இந்த வாழ்த்து எத்தகையதோ என்று எண்ணிக் கொண்டிருந்தார். வானதூதர் அவரைப் பார்த்து, "மரியா, அஞ்சவேண்டாம் கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர். இதோ, கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர் அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர். அவர் பெரியவராயிருப்பார் உன்னத கடவுளின் மகன் எனப்படுவார். அவருடைய தந்தை தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தின் மீது என்றென்றும் ஆட்சி செலுத்துவார். அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது" என்றார். அதற்கு மரியா வானதூதரிடம், "இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே!" என்றார். வானதூதர் அவரிடம், "தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலால் உம்மிடம் பிறக்கப் போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும். உம் உறவினராகிய எலிசபெத்தும் தம் முதிர்ந்த வயதில் ஒரு மகனைக் கருத்தரித்திருக்கிறார். கருவுற இயலாதவர் என்று சொல்லப்பட்ட அவருக்கு இது ஆறாம் மாதம். ஏனெனில், கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை" என்றார். பின்னர் மரியா, "நான் ஆண்டவரின் அடிமை உம்சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்றார். அப்பொழுது வானதூதர் அவரை விட்டு அகன்றார்.

**தியானம்:** இன்றைய தியான வாசகங்கள் எங்களை மீட்டெடுக்க மீட்பர் ஒருவர் வருவார் அவரே இருளில் இருந்து ஒளிக்கு எங்களை அழைத்தச் செல்வார், எனவே ஆவியானவரின் கனிகளால் நிரப்பபட்டவர்களாக அவரை ஏற்றுக்கொண்டு வாழ எங்களை தயார்படுத்த வேண்டுமென்று கூறுகின்றது. "நான் ஆண்டவரின் அடிமை உமது சித்தத்தின்படியே ஆகட்டும்" (லூாக்.1:38) இவ்வாறு அன்னை மரியாள் கூறிய இறைவார்த்தையானது தாழ்ச்சி என்னும் புண்ணியத்தினை வெளிப்படுத்தி நிற்கின்றது. கபிரியேல் தூதரால் "கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர் அவருக்கு இயேசு என்று பெயரிடுவீர்" என்று கூறியபோது இவை எவ்வாறு நிகழும் என்று அஞ்சுகின்றாள், திகைக்கின்றாள் இருப்பினும் ஆவியானவரால் நிரப்பபப்பட்டவராய் "இதோ ஆண்டவரின் அடிமை" என்று தன்னை தாழ்த்தி ஒப்புக்கொடுக்கின்றாள். இதைத்தான் தாவீதின் குடும்பத்தாரே ஆண்டவரை சோதிக்காதீர்கள் ஆண்டவர் உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் காட்டுவார் என்று எசாயா தீர்க்கதரசி ஏற்கனவே அறிவித்தள்ளார். (எசா.7:14) திருமுழுக்கு என்னும் அருட்சாதனத்தின் மூலம் ஆவியானவரின் கனிகளையும் கொடைகளையும் பெற்றுக்கொண்ட நாங்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கின்றோமா? ஏற்றுக்கொள்வோமானால் அன்பு, மகிழ்ச்சி. அமைதி, பொறுமை…..(கலாத்.6:22) எம்மத்தியில் அன்றாடம் காணப்படும், அப்பொழுது எமக்கு எவ்வாறானவை எதிர்த்து வந்தாலும் ஆவியானவரின் வழிநடத்தல் எங்கள் கூடவே இருக்கும். எனவே எதற்கும் தயங்காமல் நாங்கள் கிறிஸ்துவிற்கு சாட்சியாக அவரைப்பற்றி அறிவிக்க, அவர்வழியில் மற்றவர்களையும் நல்வழிப்படுத்த அன்று அன்னை மரியாள் எவ்வாற வாழ்ந்தாளோ அதே போன்று இறைவார்த்தையை வாசித்து தியானித்து அதன்படி வாழ எங்களைத் தயர்படுத்தவோம்.